செய்தி வெளியீடு எண்.497/2010 நாள்: 9.7.2010

**தமிழகத்திலேயே முதன்முதலாக நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய பளுதூக்கும் கருவி மற்றும் உடல் வலுவூட்டும் கருவிகளின் மூலம் செய்யும் பயிற்சியை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் திரு.சத்தியப்பிரதசாகு, இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.**

வேலூர் மாவட்டம் சத்துவாச்சாரியில் தமிழகத்திலேயே முதன்முதலாக ஐப்பான் நாட்டில் இருந்து வரவழைக்கப்பட்ட ரு 17.25 லட்சம் மதிப்பிலான நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய பளுதூக்கும் கருவி மற்றும் உடல் வலுவூட்டும் கருவிகளின் மூலம் செய்யும் பயிற்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் திரு.சத்தியப்பிரதசாகு, இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து விழா பேரூரையாற்றுகையில்:

சிறப்பு பயிற்சி நிலையத்திற்கு வந்தது மகிழ்ச்சி அளிக்கிறது. தமிழகத்திலேயே முதன்முதலாக இந்த நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய உடற்பயிற்சி செய்யும் கருவிகள் உள்ளது சிறப்பாகும். இந்த பகுதி மக்கள் ஆர்வத்தின் காரணமாக இங்கே தொடங்கப்பட்டுள்ளது. இங்கே உள்ளவர்கள் அதிக மக்கள் இதை பயன்படுத்தி மென்மேலும் பல போட்டிகளில் கலந்து கொண்டு இந்தியாவிற்கும் தமிழகத்திற்கும் பெருமை சேர்த்திட வேண்டும். தமிழகத்தில் தான் அதிக அளவில் தேசிய அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்று வருகிறார்கள். விரைவில் மாவட்ட அளவில் அனைத்து வசதிகளுடன் கூடிய சிறந்த விளையாட்டு அரங்கம் அமைக்கப்படும். வட்ட அளவிலும் விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட உள்ளது. நீங்கள் தினந்தோறும் இந்த பயிற்சி கூடத்தில் பயிற்சி பெற்று நல்ல ஆரோக்கியத்துடன் வாழவும், தேசிய அளவில் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிகள் பெறவும் பாராட்டுகிறேன் என கூறினார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.செ.ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையுரை ஆற்றுகையில்: பல்வேறு சாதனைகளை படைக்க கூடிய வேலூர் மாவட்டத்தில் இந்த பயிற்சி கூடம் வந்திருப்பது ஒரு வரப்பிரசாதமாகும். மாவட்ட அளவிலான விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கான இடம் விரைவில் தேர்வு செய்யப்பட்டு அதற்கான பணிகள் தொடங்கப்படும். இப்பகுதியில் குத்துசண்டையில் சிறந்த வீரர்கள் இருக்கிறார்கள். அதுபோல் பளுதூக்கும் போட்டியிலும் சிறந்த வீரர்கள் உருவாக்கப்பட வேண்டும். உலக அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்குபெற முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்று கூறினார்.

உலக அளவில் நடைபெற்ற பளுதூக்கும் போட்டியில் கலந்து கொண்டு பரிசு பெற்ற திரு.சத்தியகுமார் அவர்களுக்கு ரு 3000/-க்கான தொகையையும், பளுதூக்கும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு நினைவு பரிசுகளை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் திரு.சத்தியப்பிரதசாகு, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் வேலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.சி.ஞானசேகரன், வட்டார கல்விக்குழு தலைவர் திரு.ஆர்.பி.ஏழுமலை, சென்னை மண்டல முதுநிலை மேலாளர் திரு.தியோடர், தமிழ்நாடு தடகள துணை தலைவர் திரு.இளங்கோவன் ஆகியோர் வாழ்த்துரையாற்றினார்கள். செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.விஜயகுமார் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.

மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு.மதிமாறன், சத்துவாச்சாரி நகராட்சி செயல் அலுவலர் திரு.சண்முகம் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், விளையாட்டு வீரார்கள், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

முன்னதாக வேலூர் ஆணையத்தின் மேலாளர் திரு.பீட்டர் ராஜசந்திர பாண்டியன் அனைவரையும் வரவேற்றார். பளுதூக்கும் பயிற்சியாளர் திரு.நாகராஜன் நன்றி கூறினார்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், வேலூர் - 9.